சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 2007–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்களையும், திட்ட மதிப்பீடுகளையும் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான முறை மற்றும் நிபந்தனைகள்) விதிகளுக்கு பதிலிட்டகற்றீடாக, 2024–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்களையும், திட்ட மதிப்பீடுகளையும் தயாரித்தல், சரக்கு மற்றும் சேவை வழங்கல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான முறை மற்றும் நிபந்தனைகள்) விதிகளை இயற்றுதல் – அறிவிக்கையிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.1) துறை

அரசாணை (நிலை) எண்.106

நாள்: 22.06.2024.
குரோதி, ஆனி – 8
திருவள்ளுவர் ஆண்டு 2055
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ–1) துறை, நாள் 20.12.2007.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 52770/சா (ம) பா 1.1/2023, நாள் 20.09.2023.

* * * * * *

**ஆணை:**

பின் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையானது 25.06.2024–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79.
(25.06.2024–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடுவதற்கும் 100 படிகளை அரசிற்கு அனுப்புவதற்கும்)
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.

(த.பி.பா)

Scanned with CamScanner

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (சென்னை நீங்கலாக)
(மாவட்டத்திலுள்ள உள்ளாட்சி அமைப்பின் அனைத்து செயலாக்க அலுவலர்களுக்கும் இந்த அறிவிக்கையினை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்)

**நகல்**

அரசு செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை-9.
சட்டத் துறை, சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை-9.
இருப்பு கோப்பு / உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner

<u>பிற்சேர்க்கை.</u>

<u>அறிவிக்கை –I</u>

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 242–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவு மற்றும் (2)–ஆம் உட்பிரிவைச் சேர்ந்த பகுதிகள் (xv) மற்றும் (xx) ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் திட்ட மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான முறை மற்றும் நிபந்தனைகள்) 2007–ன் விதிகளுக்கு பதிலீட்டகற்றீடாக, தமிழ்நாடு மேதகு ஆளுநர் அவர்கள், பின்வரும் விதிகளை இதனால் இயற்றுகிறார்:–

<u>விதிகள்.</u>

<u>1. குறுந்தலைப்பு</u>. இந்த விதிகள், தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்களையும், திட்ட மதிப்பீடுகளையும் தயாரித்தல், சரக்குகள், சேவை வழங்கல் ஆகியவற்றின் ஒப்பந்தங்களுக்கான முறை மற்றும் நிபந்தனைகள்) 2024–ஆம் ஆண்டு விதிகள் என அழைக்கப்படலாம்.

<u>2. விதிகளின் பயன்பாடு:</u> இந்த விதிகள் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் பொது நிதிகளிலிருந்து, மேற்கொள்ளப்படும் திட்டங்களை செயல்முறைப்படுத்தப்படுவது தொடர்பான திட்டப்பணிகள், சரக்குகள் வழங்கல் மற்றும் சேவைகளையாற்றுதல் ஆகியவற்றிற்கும் மத்திய அரசு பங்களிக்கும் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களுக்கும் பொருந்தும்.

<u>3. நிருவாக அனுமதி</u>. (i) மத்திய அரசு பங்களிக்கும் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் நிதியுதவி பெறும் திட்டப்பணிகளைப் பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு திருத்தியமைக்கப்பட்ட நிருவாக அனுமதி உள்ளிட்ட நிருவாக அனுமதி வழங்குவதற்கான தகுதியுடைய அலுவலர், மாவட்ட ஆட்சியர் ஆவார்.

(ii) கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் பொது நிதிகளின் கீழ் மேற்கொள்ளப்படுகிற மூலப்பணிகள் பராமரிப்பு மற்றும் மின்சாரப் பணிகளைப் பொறுத்தவரையில் (பகிர்வு மானியங்கள், மத்திய நிதிக்குழு மானியங்கள், சுரங்கங்கள் மற்றும் கனிமங்களுக்கான நிதிகள் மற்றும் ஏனைய சொந்த வருவாய்க்கான நிதி ஆதாரங்கள் உட்பட) திருத்தியமைக்கப்பட்ட நிருவாக அனுமதி உள்ளிட்ட நிருவாக அனுமதி வழங்கும் தகுதியுடைய அலுவலர்கள் பின்வரும் அட்டவணைகள் I, II மற்றும் III–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக இருப்பர்:

Scanned with CamScanner

## அட்டவணை I

## கிராம ஊராட்சி

| வ.எண்.<br>(1) | மதிப்பீட்டுத் தொகை<br>(2) | உரிய அதிகார அமைப்பு<br>(3) |
|---|---|---|
| 1 | ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத பணிகள் | கிராம ஊராட்சி |
| 2 | ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேற்படாத பணிகள் | மாவட்ட ஆட்சியர் |
| 3 | ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகள் | இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |

## அட்டவணை II

## ஊராட்சி ஒன்றிய மன்றம்

| வ.எண்.<br>(1) | மதிப்பீட்டுத் தொகை<br>(2) | உரிய அதிகார அமைப்பு<br>(3) |
|---|---|---|
| 1 | இருபத்து ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத பணிகள் | ஊராட்சி ஒன்றிய மன்றம் |
| 2 | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேற்படாத பணிகள் | மாவட்ட ஆட்சியர் |
| 3 | ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகள் | இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |

Scanned with CamScanner

## அட்டவணை III

### மாவட்ட ஊராட்சி

| வ.எண். (1) | மதிப்பீட்டுத் தொகை (2) | உரிய அதிகார அமைப்பு (3) |
|---|---|---|
| 1 | ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்படாத பணிகள் | மாவட்ட ஊராட்சி |
| 2 | ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேல் ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாத பணிகள் | மாவட்ட ஆட்சியர் |
| 3 | ரூபாய் ஒரு கோடிக்கு மேற்பட்ட பணிகள் | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |

<u>4. தொழில்நுட்ப அனுமதி</u>.- பொது நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிற பணிகள் மற்றும் மத்திய அரசு பங்களிக்கும் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் நிதியுதவி பெறும் திட்டப் பணிகளைப் பொறுத்தவரையில், தொழில்நுட்ப அனுமதி வழங்கும் தகுதியுடைய அலுவலர்கள், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக இருப்பர்.

### அட்டவணை

| வ. எண். | உரிய அதிகார அமைப்பு | மூலப் பணிகள் | பராமரிப்புப் பணிகள் | மின்சாரப் பணிகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ஒன்றிய பொறியாளர் / உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) | மத்திய அல்லது மாநில அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ் பயனாளிகளால் கட்டப்படும் அனைத்து | ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்படாத பணிகள் | ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்படாத பணிகள் |

Scanned with CamScanner

| வ. எண். | உரிய அதிகார அமைப்பு | மூலப் பணிகள் | பராமரிப்புப் பணிகள் | மின்சாரப் பணிகள் |
|---|---|---|---|---|
| | | வீட்டுப் பணிகளும் அரசு நிர்ணயித்த அலகு விலைக்கு மேற்படாத மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் கட்டப்படும் வீடுகள் உட்பட இதர பணிகளுக்கு ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத அனைத்துப் பணிகள் | | |
| 2. | உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) | மத்திய அல்லது மாநில அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ் பயனாளிகளால் கட்டப்படும் வீடுகள் நீங்கலாக,<br><br>ஒப்பந்தப்புள்ளி மூலம் கட்டப்படும் வீடுகள் உட்பட அனைத்துப் பணிகளுக்கும் ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட | ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மேற்படாத பணிகள் | ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மேற்படாத பணிகள் |

Scanned with CamScanner

| வ. எண். | உரிய அதிகார அமைப்பு | மூலப் பணிகள் | பராமரிப்புப் பணிகள் | மின்சாரப் பணிகள் |
|---|---|---|---|---|
| | | ஆனால் இருபத்தைந்து இலட்ச ரூபாய்க்கு மேற்படாத அனைத்துப் பணிகள் | | |
| 3. | செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) | ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ஒரு கோடி ரூபாய்க்கு மேற்படாத அனைத்துப் பணிகள் | ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்படாத பணிகள் | ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்படாத பணிகள் |
| 4. | கண்காணிப்புப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) | ரூபாய் ஒரு கோடிக்கு மேற்பட்ட ஆனால் இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்படாத அனைத்துப் பணிகள் | ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேற்படாத பணிகள் | ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஆனால் ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேற்படாத பணிகள் |
| 5. | தலைமைப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) | ரூபாய் இரண்டு கோடிக்கு மேற்பட்ட அனைத்துப் பணிகள் | ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேற்பட்ட அனைத்து பணிகள் | ரூபாய் ஐம்பது இலட்சத்திற்கு மேற்பட்ட அனைத்து பணிகள் |

**விளக்கங்கள்.–** (1) சாலையினை கீழ்மட்ட பரப்பிலிருந்து மேல் பரப்பிற்கு பாவுதள முதலடுக்கு (Sub base) மற்றும் அடித்தளத்துடன் (base course) தார்ச் சாலையாகவோ

Scanned with CamScanner

அல்லது தாரிடப்படாத சாலையாகவோ தரம் உயர்த்துதல் மூலப் பணியாகக் (original works) கருதப்படும். உதாரணமாக, கப்பி தளத்துடன் (Water Bound Macadam (WBM) layers(s) or Wet Mix Macadam (WMM)) தார்ச் சாலையாகவோ அல்லது தாரிடப்படாத சாலையாகவோ மற்றும் முழு நீளத்திற்கும் தார் அடுக்கினை (Bituminous layer) மீள அமைக்கும் பணிகள், மேலும் ஏற்கனவே உள்ள சேதமடைந்த சிமென்ட் கான்கிரீட் மேற்பரப்பின் மீது மேல்தள சிமென்ட் கான்கிரீட் அமைப்பதும் மூலப் பணியாக (original works) கருதப்படும். இவை பராமரிப்புப் பணியாகக் (maintenance work) கருதப்படாது.

(2) ஏற்கனவே உள்ள பழுது பட்ட தார்ச்சாலை/தாரிடப்படாதச் சாலைகளை பாவுதள முதலடுக்கு மற்றும் / அல்லது அடித்தளத்துடன், தார்ச்சாலையாகவோ தாரிடப்படாத சாலையாகவோ மேம்படுத்துதல், தரம் உயர்த்துதல் அல்லது வலுப்படுத்துதல் ஆகியவை மூலப் பணியாக கருதப்படும்.

(3) சாலையின் ஒரு பகுதியில் மேற்கொள்ளப்படும் பழுது நீக்கம் மற்றும் மீளமைத்தல் பணிகள் பராமரிப்புப் பணியாக கருதப்படும்.

(4) நீர்நிலைப்பகுதிகள் மற்றும் கால்வாய்களில் தூர் வாரும் பணிகள் அல்லது அவற்றை ஆழப்படுத்துதல் மூலப் பணியாக கருதப்படும்.

(5) குழாய் அமைப்பின் (Pipe line) விரிவாக்கம், முதன்மை / பகிர்மான குழாயை மீளமைத்தல் ஆகிய பணிகள் மூலப் பணியாகக் கருதப்படும்.

(6) யாதொரு திட்டப்பணியின் பகுதியாக, தெருவிளக்குகள், புதிய மோட்டார்கள், பம்புகள் அல்லது யாதொரு புதிய உதிரிப் பாகங்கள், சாதனம், இயந்திரப் பகுதி ஆகியவற்றை கொள்முதல் செய்து, நிறுவுதல், பொது சேவைகளை பராமரித்தல் ஆகியவையும் மூலப் பணிகளாகக் கருதப்படும்.

(7) முன்மொழியப்பட்டுள்ள பணியின் தேர்வு, பணிக்கான இடத்தேர்வு மற்றும் மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ள வகையங்கள் பணிதளத்திற்கு ஏற்றவாறு சரியாக உள்ளதா மற்றும் போதுமானதாக உள்ளதா என்பதனை உதவிப் பொறியாளர்கள்/ஒன்றிய பொறியாளர்கள், 50 சதவீதத்திற்கு குறையாத பணிகளையும், உதவி செயற்பொறியாளர்கள் 25 சதவீதத்திற்கு குறையாத பணிகளையும் மற்றும் செயற்பொறியாளர்கள் 10 சதவீதத்திற்கு குறையாத பணிகளையும் தொழில்நுட்ப அனுமதிக்கு முன் நேரில் ஆய்வு செய்ய வேண்டும்.

(8) தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள், அவர்களின் அதிகார வரம்பில், தொழில்நுட்ப அனுமதி வழங்குவதற்கு முன்னர், பணிகளில் 5 சதவீதப் பணிகளை ஆய்வு செய்ய வேண்டும். மேலும், தொழில்நுட்ப அனுமதி வழங்குவதற்கு முன்னர், அனைத்து பாலப்பணிகளுக்கான இடங்களை ஆய்வு செய்ய வேண்டும்.

(9) உதவிப் பொறியாளர்கள்/ஒன்றிய பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் இணைந்து, தொழில்நுட்ப அனுமதிக்காக தலைமைப்

Scanned with CamScanner

பொறியாளர்/கண்காணிப்பு பொறியாளர் ஆகியோருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அனைத்து பணிகளுக்கான மதிப்பீடுகளில் உள்ள வகையங்கள் போதுமானதாக உள்ளதா மற்றும் சரியாக உள்ளதா என்பதை கூட்டாக ஆய்வு செய்ய வேண்டும்.

(10) தலைமைப் பொறியாளர்/கண்காணிப்பு பொறியாளர்களின் தொழில்நுட்ப அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும் பணிகளில், மதிப்பீடுகளில் உள்ள வகையங்கள் போதுமானதாக உள்ளதா மற்றும் சரியாக உள்ளதா என்பதனை குறைந்தது ஐம்பது சதவீதப் பணிகளையேனும் செயற்பொறியாளர்கள் ஆய்வு செய்ய வேண்டும்.

**5. பயனாளிகளால் கட்டப்பட்ட வீடுகள் தவிர பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS), கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் அனைத்து பணிகளின் அளவீடு மற்றும் மேலளவீடு.** பயனாளிகளால் கட்டப்பட்ட வீடுகள் நீங்கலாக, பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஒப்பந்தப்புள்ளிகள் வாயிலாக கட்டப்படும் தனிப்பட்ட வீடுகள் உட்பட அனைத்துப் பணிகளுக்கும், ஒப்பந்தம் மூலமாகவோ அல்லது துறை சார்ந்த முகமை மூலமாகவோ மேற்கொள்ளப்பட்ட அனைத்து மூலப்பணிகள், பராமரிப்பு மற்றும் மின்சாரப் பணிகள் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் அளவீடு செய்வதற்கும் மேலளவீடு செய்வதற்கும் தகுதியுடைய அலுவலர்கள் குறித்து கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>அட்டவணை</u>

| வ. எண் | பணியின் மதிப்பு | அளவீடு மேற்கொள்ளும் அலுவலர் | மேலளவீடு மேற்கொள்ளும் அலுவலர் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ரூபாய் மூன்று இலட்சத்திற்கு மேற்படாதவை | பணி மேற்பார்வையாளர் | ஒன்றிய பொறியாளர் அல்லது உதவி பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) |
| 2. | ரூபாய் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்டவை | ஒன்றிய பொறியாளர் அல்லது உதவி பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) | உதவி செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) |

Scanned with CamScanner

**விளக்கங்கள்**.– (1) உரிய அலுவலர்களால் பணிகள் அளவீடு மற்றும் மேலளவீடு செய்யப்படாமல், தொகைக்கான பட்டியல் அனுமதிக்கப்படாது.

(2) உபகோட்டங்களில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) ரூபாய் மூன்று லட்சத்திற்கும் மிகாத மதிப்புடைய பணிகளில், 5 சதவீதத்திற்கு குறையாத பணிகளை உயர் அளவீடு (Super check) செய்ய வேண்டும்.

(3) செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) மாவட்டத்தில் ரூபாய் ஐம்பது இலட்சம் மதிப்பீட்டிற்கு மேல் உள்ள கட்டடங்கள் மற்றும் பாலங்களின் கட்டுமானப் பணியின் முக்கிய மூன்று நிலைகளில் குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டும் உயர் அளவீடு (Super–check) செய்வதோடு, உதவி செயற்பொறியாளர் (சாலை மற்றும் பாலங்கள்) மற்றும் உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) ஆகியோரால் மேலளவீடு செய்யப்பட்டுள்ள பணிகளில் குறைந்தபட்சம் பத்து விழுக்காடு பணிகளை ஒவ்வொரு நிதி ஆண்டும் தனித்தனியாக உயர் அளவீடு (Super–check) செய்ய வேண்டும்.

**6. பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ் பயனாளிகளால் கட்டப்படும் வீட்டுப் பணிகளின் அளவீடு மற்றும் மேலளவீடினைச் செய்தல்.** மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ், அரசு நிர்ணயிக்கப்பட்ட அலகு மதிப்பீட்டில், பணியின் மதிப்பைக் கணக்கில் கொள்ளாமல், பயனாளிகளால் கட்டப்படும் அனைத்து வீட்டுப் பணிகளுக்கும், பணி மேற்பார்வையாளர் அளவீடு அலுவலராகவும், ஒன்றிய பொறியாளர் அல்லது உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) மேலளவீடு அலுவலராகவும் இருப்பார்.

**விளக்கம்.–** உப கோட்டங்களில் பணி புரியும் உதவி செயற்பொறியாளர்கள், (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ் கட்டப்படும் வீட்டு பணிகளில் ஐந்து விழுக்காடு பணிகளுக்குக் குறையாமல் உயர் அளவீடு (Super check) செய்யவேண்டும்

7. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் **திட்டத்தின் (MGNREGS)" கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் அளவீடு மற்றும் மேலளவீடு செய்தல்.– (1)** " மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அனைத்து பணிகளையும் அளவீடு மற்றும் மேலளவீடு மேற்கொள்ள தகுதியுடைய அலுவலர்கள் குறித்து பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:–

Scanned with CamScanner

அட்டவணை

| வ. எண் | பணியின் மதிப்பு | அளவீடு மேற்கொள்ளும் அலுவலர் | மேலளவீடு மேற்கொள்ளும் அலுவலர் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ரூபாய் மூன்று இலட்சத்திற்கு மேற்படாத பட்டியல் தொகை | பணி மேற்பார்வையாளர் | ஒன்றிய பொறியாளர் அல்லது உதவி பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) |
| 2. | ரூபாய் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட பட்டியல் தொகை | ஒன்றிய பொறியாளர் அல்லது உதவி பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) | உதவி செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) |

(2) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (MGNREGS) துணை விதி (1)-ல் குறிப்பிட்டுள்ள வழிவகைகள், 100% தொழிலாளர் சார்ந்த பணிகளுக்கு மட்டுமே பொருந்தும். கணிசமான பொருள் கூறு வேலைகளை உள்ளடக்கிய பணிகளுக்கு, விதி 5-ன் கீழ் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி அளவீடு மற்றும் மேலளவீடு செய்யப்பட வேண்டும்.

(3) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், கிராம ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான தொடர்ச்சியான ஐந்து பட்டியல்களில், ஒவ்வொரு பட்டியலின் மதிப்பும் மூன்று இலட்சம் ரூபாய்க்கு மிகாத நிலையில், சம்மந்தப்பட்ட உதவி செயற்பொறியாளரால் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி) மேல் அளவீடு செய்யப்படும் வரையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) ஐந்தாம் பட்டியலுக்கான தொகையை வழங்காமல் நிறுத்தலாம்.

(4) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கிராம ஊராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளை சம்மந்தப்பட்ட உதவி செயற் பொறியாளர் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை) அவர்கள், மேலளவீடு மற்றும்

Scanned with CamScanner

உயர் அளவீடு (பணிகளுக்கு ஏற்றவாறு) மேற்கொள்ளும் வரை இறுதி பட்டியல், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களால் அனுமதிக்கப்படமாட்டாது.

8. **செயல்படுத்தும் அதிகார அமைப்பு:** மத்திய அரசு பங்களிக்கும் மற்றும் மாநில அரசு நிதியுதவியளிக்கும் திட்டங்களையும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதியின் கீழுள்ள பணிகளையும் செயற்படுத்துவதற்கு கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் பொறுப்பானவர்கள் ஆவர்.

<u>அட்டவணை</u>

| வ.எண் | பணியின் வகை | செயல்படுத்தும் அதிகார அமைப்பு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | கிராம ஊராட்சிக்கான பொது நிதி பணிகள் | செயல் அலுவலர், கிராம ஊராட்சி |
| 2. | கிராம ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகள் | செயல் அலுவலர், கிராம ஊராட்சி |
| 3. | வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (கிராம ஊராட்சிகள்) ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) |
| 4. | ஊராட்சி ஒன்றியத்துக்கான பொது நிதிப் பணிகள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |
| 5. | மாவட்ட ஊராட்சிக்கான பொது நிதிப் பணிகள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |
| 6. | ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப் பணிகள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |
| 7. | வட்டார வளர்ச்சி அலுவலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகள் (வட்டார வளர்ச்சி) | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) |
| 8. | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அல்லது அரசால் குறிப்பிடப்பட்ட, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையிலுள்ள அத்தகைய செயற்படுத்தும் அதிகார அமைப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகள் | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அல்லது அரசால் குறிப்பிடப்பட்ட, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையிலுள்ள அத்தகைய செயற்படுத்தும் அதிகார அமைப்பு. |

Scanned with CamScanner

**விளக்கம்:–** பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள் மட்டுமல்லாது, மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்படுத்தும் முகமைகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலமாக பிறப்பிக்கப்பட்ட அரசாணையால் அவர்களிடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களை மட்டுமே செயற்படுத்தும்.

9. **பட்டியல்களுக்கு ஏற்பளித்தல்** மற்றும் தொகை வழங்கல்.– விதி 8–ல் உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களைச் செயல்படுத்தும் அதிகார அமைப்புகள், அவர்களிடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகளுக்கு வேலையின் மதிப்பு அல்லது பட்டியலின் தொகை எதுவாக இருப்பினும் அவற்றினை ஏற்பளிக்கவும் தொகையை வழங்கவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

10. **அவசர காலங்களில் வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சியின் அதிகாரங்கள்.–** அவசர காலம், வெள்ளம், மற்றும் ஏனைய இயற்கை பேரிடர்களின்போது, மதிப்பீடுகள் தயாரிப்பு, அனுமதி பெறாமல், கிராம ஊராட்சி நிதி கணக்குகளிலிருந்து, ஓர் ஆண்டில் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மிகாமல் ஒரே நேரத்தில் ஐந்தாயிரம் ரூபாய் வரையில் கிராம ஊராட்சி செலவு மேற்கொள்ளலாம் மற்றும் வட்டார ஊராட்சி பொது நிதி கணக்குகளிலிருந்து, ஆண்டொன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் ஒரே நேரத்தில் பத்தாயிரம் ரூபாய் வரையில் வட்டார ஊராட்சி செலவு மேற்கொள்ளலாம். பணிகளை நிறைவு செய்த பின்னர், நடைபெறும் கிராம ஊராட்சி மற்றும் வட்டார ஊராட்சி கூட்டத்தில் பணியின் விவரங்களும், செலவுச்சீட்டுகளும் தகவலுக்காக வைக்கப்பட வேண்டும். இப்பணிகளில், கீழே விழுந்த மரங்களை அகற்றுதல், குப்பைகளை சுத்தப்படுத்துதல், வெள்ளநீர் சூழப்பட்ட பகுதிகளிலிருந்து வெள்ளநீரை வெளியேற்றுதல், வெள்ளநீரைத் திருப்பிவிடுதல், சாலைகளை தற்காலிகமாக சீரமைத்தல், மணல் மூட்டைகளை அடுக்கி வைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளலாம். ஆனால் இப்பணிகளுக்கு வரையறை இல்லை.

ப. செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## அறிவிக்கை– II

1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 7ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு மேதகு ஆளுநர் அவர்கள் கீழே அட்டவணை I மற்றும் II–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அலுவலர்களையும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கும் அலுவலர்களையும் இதனால் நியமனம் செய்கிறார்:–

அட்டவணை– I

| வ. எண் | பணிகளின் வகைப்பாடு | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் அலுவலர் | | |
|---|---|---|---|---|---|
| | | | மிகை ஒப்பந்தப்புள்ளி இல்லாத நேர்வில் | ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மிகாத மதிப்புடைய பணிகளுக்கு 5% வரையில் மிகையான ஒப்பந்தப்புள்ளி | (i) ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மிகாத மதிப்புடைய பணிகளுக்கு 5%–க்கும் அதிகமான மிகை ஒப்பந்தப்புள்ளி<br>(ii) ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மிகையான மதிப்புடைய பணிகளுக்கு யாதொரு மிகையான ஒப்பந்தப்புள்ளி |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | கிராம ஊராட்சியின் பொது நிதி பணிகள் | செயல்படுத்தும் அமைப்பு, கிராம ஊராட்சி | கிராம ஊராட்சி | மாவட்ட ஆட்சியர் | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி |
| 2. | கிராம ஊராட்சியிடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப் பணிகள் | செயல்படுத்தும் அமைப்பு, கிராம ஊராட்சி | கிராம ஊராட்சி | மாவட்ட ஆட்சியர் | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி |

Scanned with CamScanner

| வ. எண் | பணிகளின் வகைப்பாடு | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் அலுவலர் | | |
|---|---|---|---|---|---|
| 3. | வட்டார வளர்ச்சி அலுவலரிடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப் பணிகள் (கிராம ஊராட்சிகள்) | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) | மாவட்ட ஆட்சியர் | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி |
| 4. | ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதி பணிகள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) | ஊராட்சி ஒன்றியக் குழு | மாவட்ட ஆட்சியர் | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி |
| 5. | ஊராட்சி ஒன்றியத்திடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப் பணிகள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) | ஊராட்சி ஒன்றியக் குழு | மாவட்ட ஆட்சியர் | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி |
| 6. | மாவட்ட ஊராட்சியின் பொது நிதி பணிகள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) | மாவட்ட ஆட்சியர் | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி |
| 7. | வட்டார வளர்ச்சி (வட்டார ஊராட்சி) அலுவலரிடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டப்பணிகள் | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) | மாவட்ட ஆட்சியர் | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி |

Scanned with CamScanner

<u>அட்டவணை – II</u>

| ஒப்பந்தப் புள்ளி கோரும் அதிகார அமைப்பு | ஒப்பந்தப் புள்ளியை ஏற்கும் அதிகார அமைப்பு | |
|---|---|---|
| | திட்ட மதிப்பீட்டிற்குள் அமைந்திருக்கும் நேர்வில் அல்லது ரூபாய் இருபத்தைந்து இலட்சத்துக்கு மிகாத மதிப்பிலான தனிப்பட்ட பணிகள் அல்லது ரூபாய் இரண்டு கோடிக்கு மிகாத மதிப்பிலான தொகுப்புப் பணிகள் (ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளின் தொகுப்பு) எனும் நேர்வில் ஒப்பந்தப் புள்ளிக்கு 5% வரையிலான மிகைத் தொகை | (i) ரூபாய் இருபத்தைந்து இலட்சத்துக்கு மிகாத மதிப்பிலான தனிப்பட்ட பணிகள் அல்லது ரூபாய் இரண்டு கோடிக்கு மிகாத மதிப்பிலான தொகுப்புப் பணிகள் (ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளின் தொகுப்பு) எனும் நேர்வில் ஒப்பந்தப் புள்ளி 5% மிகையாக<br><br>(அல்லது)<br><br>(ii) ரூபாய் இருபத்தைந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மதிப்பிலான தனிப்பட்ட பணிகள் அல்லது ரூபாய் இரண்டு கோடிக்கும் மேற்பட்ட மதிப்பிலான தொகுப்புப் பணிகள் (ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளின் தொகுப்பு) எனும் நேர்வில், யாதொரு மிகை ஒப்பந்தப் புள்ளி |
| (1) | (2) | (3) |
| திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அல்லது அரசால் குறிப்பிடப்பட்டவாறாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள அதனையொத்த செயல்படுத்தும் அதிகார அமைப்பு | மாவட்ட ஆட்சியர் | இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி |

Scanned with CamScanner

குறிப்பு: ஆலோசனை, தரக்கட்டுப்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள் உட்பட்ட பணிகளில், இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ரூபாய் பத்து கோடி வரையிலான மதிப்புடைய ஒப்பந்தப் புள்ளிகளைப் கோரி அவற்றை ஏற்கலாம். ரூபாய் பத்து கோடிக்கு மேற்பட்ட மதிப்பிலான நேர்வுகளில், அரசு ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கும் அதிகார அமைப்பாக விளங்கும்.

1. **ஒப்பந்ததாரர் பதிவு.–** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்குத் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு குறித்து அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுறைகள் வாயிலாக நிருவகிக்கப்பட வேண்டும். மேற்கண்ட அட்டவணை I மற்றும் II –ல் குறிப்பிட்டுள்ள அமைப்புகள், பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் விவரங்களை பராமரித்திட வேண்டும்.

2. **ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு:–** தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் விதி 2000 ஆம் ஆண்டு, 24 ஆம் விதிக்கிணங்க, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குழு, ஒப்பந்த ஆவணங்களை ஆய்வு செய்து, ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படுவதை மேற்பார்வையிட்டு, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் முதல்நிலை ஆய்வையும் விரிவான மதிப்பீட்டையும் மேற்கொள்வதுடன், ஒப்பந்தப்புள்ளி ஏற்பு அதிகார அமைப்பு கருத்தில் கொள்வதற்கான மதிப்பீட்டு அறிக்கையையும் தயாரிக்கும்.

<u>அட்டவணை</u>

| வ. எண். | ஒப்பந்தப் புள்ளி கோரும் அதிகார அமைப்பு | ஒப்பந்தப் புள்ளி கூர்ந்தாய்வுக் குழு | பணியின் மதிப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | செயல்படுத்தும் அமைப்பு,<br><br>கிராம ஊராட்சி | (i) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br><br>(ii) பணி மேற்பார்வையாளர் (overseer),<br><br>(iii) ஊராட்சி செயலர் | ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மிகாமல் |

| வ. எண். | ஒப்பந்தப் புள்ளி கோரும் அதிகார அமைப்பு | ஒப்பந்தப் புள்ளி கூர்ந்தாய்வுக் குழு | பணியின் மதிப்பு |
|---|---|---|---|
| | | (i) உதவிப் பொறியாளர்<br>(ii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(iii) ஊராட்சி செயலர் | ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மிகையாவும், ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மிகாமல் |
| | | (i) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)<br>(ii) உதவிப் பொறியாளர்<br>(iii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(iv) ஊராட்சி செயலர் | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மேல் |
| 2. | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) | (i) உதவிப் பொறியாளர்<br>(ii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(iii) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டங்கள்) | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மிகாமல் |
| | | (i) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)<br>(ii) உதவிப் பொறியாளர்<br>(iii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(iv) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டங்கள்) | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மேல் |

Scanned with CamScanner

| வ. எண். | ஒப்பந்தப் புள்ளி கோரும் அதிகார அமைப்பு | ஒப்பந்தப் புள்ளி கூர்ந்தாய்வுக் குழு | பணியின் மதிப்பு |
|---|---|---|---|
| 3. | வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) | (i) உதவிப் பொறியாளர்<br>(ii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(iii) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிருவாகம்) | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மிகாமல் |
| | | (i) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)<br>(ii) உதவிப் பொறியாளர்<br>(iii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(iv) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிருவாகம்) | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மேல் |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அல்லது அரசால் குறிப்பிடப்பட்டவாறாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள அதையொத்த செயல்படுத்தும் அதிகார அமைப்புகள் | (i) திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) / ஒப்பந்தப்புள்ளி கோரும் அதிகார அமைப்பு<br>(ii) செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி)<br>(iii) கணக்கு அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை<br>(iv) ஒப்பந்தப் புள்ளி கோரும் அதிகார அமைப்பால் நியமிக்கப்பட்ட உதவி திட்ட அலுவலர் மற்றும் உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி/சாலைகள் (ம) பாலங்கள்) | அனைத்துப் பணிகள் |

Scanned with CamScanner

மத்திய அரசு பங்களிக்கும் திட்டங்கள் அல்லது ஏனைய வெளியிலிருந்து நிதியுதவி பெறும் திட்டங்கள் எனும் நேர்வில், திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அல்லது அரசால் அவ்வப்போது ஆணையிடப்பட்டுள்ளவாறு ஒப்பந்தப் புள்ளிகளின் ஆய்வு மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் ஏற்பு அமையும்.

ப. செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner